பக்கங்கள்:-15

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 04 | சனிக்கிழமை | 19.08.2023 | அதிர்வு 18

## வவுனியா இளைஞர் கொழும்பில் கொலை

கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு – மோதரையில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்தவரும் வெல் லம்பிட்டியில் வசிப்பவருமான 03

# பொங்கல் விழாவை நடத்தியமைக்காக குருந்தூர்மலை தமிழர் சொத்து அல்ல!

## பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என மீண்டும் இனவாதம் கக்குகின்றார்கள் சிங்கள எம்.பிக்கள்





"குருந்தூர்மலையில் பொங்கல் விழாவை நடத்திவிட்டோம் என்ற மமதையில் தமிழ் மக்களும் அவர்களின் அரசியல் பிரதி நிதிகளும் கருத்து வெளியிடுகின்றனர். பொங்கல் விழாவை நடத்தியமைக்காக குருந்தூர்மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக்கணக்குப் போடக் கூடாது." 03

## தமிழ் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு முக்கியவத்துவம் வழங்கக் கூடாது ஜனாதிபதி

- குருந்தூர்மலை விவகாரத்துக்குத் தீர்வு காணாவிடின் வன்முறையே வெடிக்கும் என்று மொட்டு எச்சரிக்கை



"குருந்தூர்மலை விவகாரத்துக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க விரைந்து தீர்வு காண வேண்டும். இல்லையேல் அங்கு பௌத்தர்க ளுக்கும் – தமிழர்களுக்கும் இடையில் வன் முறைதான் வெடிக்கும்."

– இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. 02

## குருந்தி விகாரை பிக்கு மீது முல்லை பொலிஸில் புகார்!

### கஜேந்திரன் எம்.பி. செய்தார்



தமிழர்தரப்பால்நேற்றையதினம்குருந்தூர் மலையில் ஏற்பாடு செய்யப்பட்ட 02

## இனவாதம் கக்கும் எம்.பிக்களை உடனே சிறையில் அடையுங்கள்!

### அவர்களின் கருத்துக்களால் நாட்டுக்கு அவமானம் என்கின்றது சஜித்தின் கட்சி

"நாட்டில் தொடர்ந்தும் இனவாதம் கக்கி வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளை அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்." 02



## துணைவேந்தராக சிறிசற்குணராஜா மீண்டும் நியமனம்!

யாழ்ப்பாணம்பல்கலைக் கழகத்தின் துணைவேந்த ராக பேராசிரியர் சி.சிறிசற் குணராஜா மீண்டும் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் 03



## கல்வியங்காட்டு வன்முறைகளின் சூத்திரதாரி டென்மார்க்வாசியாம்!

### இன்டர்போல் உதவியுடன் கைது செய்ய முயற்சி



கல்வியங்காடு பிரதேசத் தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சம்பவங்களின் சூத்தி ரதாரியாகக் காணப்படும் டென்மார்க்கில் உள்ள பிர தான சந்தேக நபரை இன் டர்போல் உதவியுடன் கைது செய்ய முயற்சி எடுக்கப் படுவதாகக் 02

## இரகசியம்



பொருளாதார விடயங் களை ஒட்டிய சில புள்ளி விவ ரங்களை இன்று வாசகர் களுடன் பகிரலாம் என்று நினைக்கிறேன்.

வறுமைக் கோட்டில் வாழும் அப்பாவிக் குடும்பங்கள் இப் போதைய பொருளாதார நெருக்கடியில் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குடும்பங்கள் பலவும் சொந்த வீடு கட்டுவது குறித்து எண்ணிப் பார்க்க முடியாத நிலையில், கட்டடப் பொருள்களின் விலைகளும் எகிறிப் போய் இருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் நாடாளுமன்றத்தின் பொது நிதிக்கான குழு ஒரு முக்கிய விடயத்தைக் கண்டுபிடித்து இருக்கின்றது.

நாட்டுக்குப் பெரிய கப்பல்களில் வரும் சீமெந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டு, பின்னர் பக்கெட்டில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றது.

வந்திறங்கிய சீமெந்தின் விலை, வரி விதிப்பு, பக்கெட்டில் அடைக்கும் செலவு, போக்குவரத்துச் செலவு, தரகுப் பணம் எல்லாம் போக ஒரு பக்கெட்டுக்கு நிகர லாபமாக 700 ரூபாவுக்குக் குறையாத தொகையை சம்பந்தப்பட்ட முதலாளிமார்கள் சூறையாடுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல்தான் அது.

இதுதான் நிலைமை என்றால் நாட்டுக்கும் மக்களுக்கும் எப்படித்தான் மீட்சி கிடைக்கும்?

* * *

இலங்கையில் மொத்தம் ஒரு லட்சத்து ஐயாயிரம் கம்பெனிகள் உள்ளன. அவற்றில் ஆக 15 ஆயிரம் கம்பெனிகள் தான் தமது வரிவிதிப்புக் கடப்பாடுகளை நிறைவு செய்கின்றனவாம். அதாவது, தவறாது உரிய வரியைச் செலுத்துகின்றனவாம். 90 ஆயிரம் கம்பெனிகள் அது பற்றியே சிந்திப்பதில்லை.

வருமான வரி கட்டும் இரண்டு லட்சத்து 95 ஆயிரம் தனிப்பட்ட நபர்களின் கோவைகள் கடந்த ஆண்டில் இருந்தன. அது கூட இப்போது இந்த ஆண்டில் 2 லட்சத்து நாலாயிரம் ஆகக் குறைந்துவிட்டது என்கிறார் தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிகத் திட்டமிடல் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே.

பொருளாதார வீழ்ச்சியால் வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கையும் விழுந்து விட்டதோ என்னவோ...!

* * *

வேலைவாய்ப்புத் தேடி வெளிநாட்டுக்கு இடம்பெயர்வோரின் எண்ணிக்கையும் எகிறி வருகின்றது.

2021 இல் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 264 பேர் இப்படி நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். அது கடந்த ஆண்டில் 3 லட்சத்து 11 ஆயிரத்து 56 ஆக உயர்ந்தது. இந்த ஆண்டில் இது இன்னமும் அதிகமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

நாட்டுக்கு மீட்சியே இல்லை என்பது தான் நிதர்சனம் போல...!

## குருந்தி விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொங்கல் நிகழ்வைக் குழப்பிய பௌத்த பிக்கு மீது நடவடிக்கையெடுக்குமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில், வழிபாட்டின் போது ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திற்குள் அத்து மீறி நுழைந்து, வன்முறையில் ஈடுபட்ட குருந்தூர்மலை சட்டவிரோத விகாரையின் விகாராதிபதி எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் கல்கமுவ சாந்தபோதி தேரருக்கு எதிராக நடவடிக்கையெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை மத வழிபாட்டு சுதந்திரத்தை மறுத்து, பொங்கல் வழிபாட்டில் பொங்கல் நேர்த்திக் கடனைச் செய்யவிடாது தடுத்த தொல்லியல் அதிகாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கையெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்வியங்காட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறப்படுகின்றது.

கல்வியங்காடு பிரதேசத்தில் அண்மையில் அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய 8 பேரை யாழ்ப்பாணம் விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட பிரதான சந்தேக நபர் வெளிநாட்டில் உள்ள நிலையில் கைதான எண்மரில் 6 பேர் இந்தச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமையுடன் ஒருவர் தாக்குதல் சம்பவத்துக்கு மோட்டார் சைக்கிளை வழங்கியவர் என்றும் மற்றொருவர் தரகராகச் செயற்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வன்முறை கும்பலிடம் இருந்து பெண்களின் ஆடைகள், மோட்டார் சைக்கிள்கள், வாள்கள், கோடாரி, இரும்புக் கம்பி, மடத்தல் போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன.

டென்மார்க்கில் வசித்துவரும் விஸ்வநாதன் என்ற நபர் பணம் அனுப்பியே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும், அரச உத்தியோகத்தரையும் அவரது குடும்பத்தினரையும் கொலை செய்யும் நோக்கில் தாக்குதல் நடத்திய வன்முறைக் கும்பலுக்கு ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபா பணம் டென்மார்க்கில் இருந்து விஸ்வநாதன் என்பவரால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக செங்குந்தா இந்து கல்லூரி விளையாட்டு மைதானம் தொடர்பில் நீடித்த பிரச்சினையே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணம் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளனர் என யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கல்வியங்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சம்பவங்களின் சூத்திரதாரியாகக் காணப்படும் பிரதான சந்தேக நபரான டென்மார்க்கில் உள்ள விஸ்வநாதன் என்பவரை இன்டர்போல் உதவியுடன் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் தாங்கள் முன்னெடுக்கவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி கல்வியங்காடு பூதவராயர் வீதியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரது வீட்டின் மீது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் வருகை தந்த 6 பேர் சேதம் விளைவித்திருந்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள், மாணவர்களின் புத்தகப்பை என்பன தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. ஜன்னல் கண்ணாடிகளும் ஊஊவுஏ கமராக்களும் சேதமாக்கப்பட்டிருந்தன. இந்தக் குழுவில் மூவர் பெண்களின் ஆடைகளை அணிந்து வந்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி -4 ஆம் பக்கத்தில்)

## இனவாதம் கக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி.

அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார மேற்படிக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

"நாட்டில் மீண்டும் இரத்தக் களரியை ஏற்படுத்தும் விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் சிலர் தொடர்ந்தும் இனவாத, மதவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அவர்களின் இவ்வாறான கருத்துக்களால் நாடு அவமானத்தைச் சந்திக்கின்றது.

இந்த விடயத்தில் ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசும் நழுவல் போக்கில் செயற்படக்கூடாது. வெறும் கண்டனங்களையும் எச்சரிக்கைகளையும் தெரிவிக்காமல் ரணில் அரசு செயலில் இறங்க வேண்டும். தொடர்ந்தும் இனவாதம் கக்கி வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளை அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்." - என்றார்.

## தமிழ் அரசியல்வாதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

"குருந்தூர்மலை விகாரைக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. அங்கு தமிழர்கள் புகுந்து சண்டித்தனம் காட்டுவதை ஏற்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பௌத்த மதத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு அமைய அவர் செயற்பட வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளின் சுயலாப அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஜனாதிபதி முக்கியவத்துவம் வழங்கக்கூடாது.

தமிழ் மக்களை உசுப்பேத்திக் குருந்தூர்மலைக்கு அழைத்து வந்து தங்கள் அரசியல் நாடகத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

குருந்தூர்மலை விவகாரத்தை உங்கள் சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்த வேண்டாம் என்று தமிழ் அரசியல்வாதிகளிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பிரதிநிதித்துவமா? அதற்கு ஆப்பா?

'மூஞ்சூறு தான் போக வழியைக் காணோமாம், அதற்குள் விளக்குமாற்றையும் தூக்கியதாம்!' - என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு. மூஞ்சூறு எலி தான் தப்பிப் போக வழியைக் காணாமல் தடுமாறும் நேரத்தில் தன்னோடு விளக்குமாற்றையும் சேர்த்து எடுத்துக் கொண்டு தப்ப ஆவல்பட்டதாம் என்பதுதான் இதன் அர்த்தம்.

உள்ளூராட்சி சபைகளில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது பற்றிய ஜனாதிபதி ரணில் தரப்பின் அறிவிப்பைப் பார்க்கும்போது இந்தப் பேச்சு மொழிதான் நினைவுக்கு வருகிறது.

அப்படி இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்த தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் இளைஞர் பிர-திநிதித்துவத்துக்கான வாய்ப்பை வழங்குவதே ஜனாதிபதி ரணிலின் வேலை திட்டம் என்றும், அதற்காகவே இந்த நடவடிக்கை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இங்கு உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த விடாமல், முடக்கியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தேர்தலே நடக்காத சீத்துவத்தில் - அதை நடக்காமல் தடை செய்து விட்டு - அந்த உள்ளூராட்சி சபைகளில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க போகின்றாராம் ரணில். இது மூஞ்சூறு தான் போக வழியைக் காணோமாம், விளக்குமாற்றையும் தூக்கிய கதைக்கு ஒப்பாகத்தான் இருக்கின்றது.

இத்தகைய பிரதிநிதித்துவ அதிகரிப்பு என்ற விளையாட்டைக் காட்டித்தான் மாகாண சபை தேர்தலையே நடத்த விடாமல் முடக்கும் சட்டத்தை நல்லாட்சி அரசில் இதே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்து கொண்டு வந்து தந்திரமாக முன்னெடுத்தார் என்பது மறைக்கப்படவோ, மறுக்கப்படவோ, மறக்கப்படவோ கூடியதல்ல.

இரண்டு மாகாணங்களுக்கான மாகாண சபை தேர்தல்களைத் தள்ளிப்போடும் நல்லாட்சி அரசின் சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தமையை அடுத்து, மாகாண சபைத் தேர்தல் முறைகளை மாற்றப் போகின்றோம் என்ற பெயரில் புதிய சட்டமூலம் ஒன்றை, புதிதாக உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டு போகாமலேயே, பின் கதவால் அப்போதைய ரணிலின் நல்லாட்சி அரசு நிறைவேற்றி, மாகாண சபை தேர்தலுக்கு கடந்த ஆறு ஆண்டுகளாக - நிரந்தரமாக - ஆப்பு வைத்திருக்கின்றது.

புதிதாகச் சட்டமூலம் கொண்டுவந்து, உயர்நீதிமன்றப் பரிசீலனைக்குப் போய், அதை நிறைவேற்ற வாய்ப்பும், சந்தர்ப்பமும், காலமும் கிட்டாது என்பதால் -

மாகாண சபையில் மகளிருக்கு அதிக இடமளித்தல் என்ற பெயரில் பிரேரிக்கப்பட்டு, நீதிமன்ற அனுமதியும் பெற்று, நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டிருந்த ஒரு சட்டமூலத்தைத் தோண்டி எடுத்துத்தான் - அதன் மீதான குழுநிலை விவாதத்தில் அதை முழுமையாகத் தலைகீழாக மாற்றித்தான் - மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கு அதுவரை நடைமுறையில் இருந்த சட்டத்தை இல்லாமலாக்கியது ரணிலின் நல்லாட்சி அரசு.

இப்போதும் அது போலத்தான் நகருகின்றது ரணி லின் அரசு. அப்போது மகளிருக்கு அதிக இடமளிக்கும் சட்ட மூலத்தை மாகாணசபைத் தேர்தலுக்கு ஆப்படிக்கப் பயன்படுத்திய அவரின் அரசு, இளைஞருக்கு அதிக பிரதிநிதித்துவம் என்ற பேச்சை இப்போது ஆரம்பித்துள்ளது. இது, உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்கும் நிரந்தரமாக ஆப்பு வைக்கும் முயற்சியோ, என்னவோ....?

## ரூ.10 லட்சத்துடன் புறப்பட்ட வர்த்தகர் காணாமல் போனார்

மாத்தறை தெனியாய பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து 10 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு வான் ஒன்றில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இது குறித்து வர்த்தகரின் மனைவி கொலன்ன பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வர்த்தகர் பயணித்த வான் கொலன்ன பனிங்கந்த பகுதியிலுள்ள பொது மயானத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வானின்சாரதி ஆசனத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் பணத்தை கொள்ளையடித்துச் செல்வதற்காக சந்தேக நபர்கள் மூலம் இவ்வாறு மேற் கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## துணைவேந்தராக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டது என்று ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஆகஸ்ட் 28ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குத் துணைவேந்தராகச் செயற்படும் வகையில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி ரணில் நியமித்துள்ளார் என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## பொங்கல் விழாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

– இவ்வாறு கூட்டாகத் தெரிவித்துள்ளனர் தென்னிலங்கை கடும்போக்கு அரசியல்வாதிகளான சரத் வீரசேகர, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகிய எம்.பிக்கள்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில் –

"குருந்தூர்மலைக்கு எவரும் வந்து வழிபடலாம். மத வழிபாட்டைக் குழப்புவது பௌத்த சிங்களவர்களின் நோக்கம் அல்ல. சகல மதத்தவர்களையும் அவர்கள் சமமாக மதிப்பவர்கள். ஆனால், பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தமான குருந்தூர்மலையைத் தமிழர்கள் உரிமை கோருவதை ஒருபோதும் ஏற்க முடியாது. பொங்கல் விழாவை நடத்தியமைக்காகக் குருந்தூர் மலை தமிழர்களின் சொத்து என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடக்கூடாது.

குருந்தூர்மலைக்கு நேற்றுச் சென்ற பௌத்த பிக்குகளும், பௌத்த சிங்கள மக்களும் அமைதியாக வழிபட்டார்கள். ஆனால், அங்கு பொங்கல் விழாவுக்கு வந்த தமிழர்கள், பௌத்த பிக்குவை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். பௌத்தர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம் குருந்தூர் மலை பௌத்தர்களின் சொத்து அது தமிழர்களின் சொத்து அல்ல." – என்றனர்.

## வவுனியா இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அருணாசலம் அஜந்தன் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த 5 வருடங்களாகக் குடும்பத்தினருடன் தங்கி நின்று வேலை புரியும் அந்த இளைஞர், நேற்று இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று இரவு வரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

# மாடியிலிருந்து விழுந்து பல்கலை மாணவன் சாவு

## ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவரா?

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் விடுதிக் கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை கட்டடம் ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்த நிலையில் அவரை ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

கட்டடத்தில் இருந்து மாணவன் வீழ்ந்தமை தொடர்பில் கஹதுடுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஹோமாகம, தியகமவில் உள்ள தொழில்நுட்ப பீடத்தில் கல்வி கற்கும் 26 வயதுடைய மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த மாணவர் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்ற சந்தேகம் நிலவுவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வன்முறைக் கும்பலில் 9 பேர் யாழில் கைது!



– எஸ்.நிதர்ஷன் –

பல்வேறு வன்முறைச்சம்பவங்களுடன் தொடர்புடைய 9 பேர் யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக கீரிமலை, கல்வியங்காடு, பரமேஸ்வரா சந்தி, பாற்பண்ணை உள்ளிட்ட பகுதிகளில் பெற்றோல் குண்டுகளை வீசி, வீடுகளைச் சேதப்படுத்திய பிரதான சந்தேக நபர் உட்பட 9 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு நபர்களிடமிருந்து மூன்று மோட்டார் சைக்கிள்கள், சம்பவத்துக்கு பயன்படுத்திய இரண்டு வாள்கள், கைக் கோடாலி ஒன்று, ஒரு இரும்புக் கம்பி, மடத்தல், அத்தோடு சம்பவத்துக்கு பயன்படுத்திய பெண்களின் ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் விசாரணைகளை செய்தபோது கல்வியங்காடு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும் அவர் அனுப்பிய பணத்தின் மூலமே சம்பவத்தைத் தாங்கள் செய்தனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதேசமயம், இவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையான பல குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Singhams Media
அலை ஓசை
துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.
ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 076 610 5467, 077 124 2732



# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# உள்ளூராட்சி சபை – மாகாண சபை – மத்திய அரசாங்கம் மூன்றையும் மையப்படுத்தி புதிய நிர்வாகப் பொறிமுறை!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் சேவைகள் வழங்குவதில் ஏற்படும் பண விரயத்தைத் தவிர்க்க, இந்த மூன்று பொறிமுறைகளின் செயற்பாடுகளை மையப்படுத்தி, புதிய பொறிமுறையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும் பிரதம செயலாளர்களுடனும் கலந்தாலோசித்து, ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான அறிக்கையைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்குத் தாம் பணிப்புரை விடுத்துள்ளார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும், பிரதம செயலாளர்களுடனும் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மாகாண சபை முறைமையுடன் எதிர்கால நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

“மாகாண சபைகளின் நிர்வாக முறைமை தொடர்பில் கலந்துரையாட நான் உங்கள் அனைவரையும் அழைத்துள்ளேன். மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி, இதனை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.

“சில சமயங்களில் உள்ளூராட்சி மன்றம், மாகாண சபை, மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளாலும் ஒரே மாதிரியான சேவைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, வடிகால் வெட்டுதல், மின் கம்பம் நடல், வீதிகள் அமைத்தல் போன்றவற்றை சுட்டிக் காட்டலாம்.இவ்வாறு நடப்பதால் பெருமளவு பணம் வீணாகிறது. அப்படியானால், இந்த மூன்று பொறிமுறைகளின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும். மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாதத்திற்குள் அதற்கான புதிய பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

“மாகாண சபைகள் இயங்காத மையாலும், மாகாண சபைகளில் அமைச்சர்கள் இல்லாதமையாலும் இன்று மாகாண சபை முறைமையில் மாகாண ஆளுநர்களாகிய உங்களுக்கே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது. மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு மாதத்திற்குள் அதற்கான புதிய கட்டமைப்பைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

“கடந்த ஆண்டு நாம் மிகப் பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டோம். அதை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் அதே வேளையில், நாட்டின் நிர்வாக முறைமையை வழமைக்கு கொண்டுவர வேண்டும்.

“குறிப்பாக கீழ்மட்ட சேவைகள் மாகாண சபைகள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகிறன. மாவட்ட அளவிலான சேவைகள் மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்படுகிறன. இந்த சேவைகளை வழங்கும் போது அதிகாரப்போட்டியின்றி கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

“தற்போது நாடு முழுவதும் உணவுப் பாதுகாப்பு திட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம். அதன்படி, எதிர்வரும் பெரும் போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும், மக்களின் ஊட்டச்சத்து குறைபாடு கடந்த ஆண்டை விட குறைவாக இருந்தாலும், அதில் திருப்தி அடைய முடியாது. அஸ்வெசும திட்டம் நாட்டு மக்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைக்க வழி வகுத்துள்ளது.

“குறிப்பாக நாடாளுமன்றம் அடுத்த வருட இறுதி வரை செயற்படும் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனைக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

“இதேவேளை, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கல்வி, தொழில்பயிற்சி மற்றும் அந்தந்த மாகாணங்களில் புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுதல் ஆகிய பணிகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

“குறிப்பாக சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் மாகாண மட்டத்தில் சுற்றுலா சபைகளை ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையில் பல வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் மாகாண மட்டத்தில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.” – என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்துடன் பணியாற்றும்போது மாகாண சபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க ஜனாதிபதி அலுவலகம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மாகாண ஆளுநர்கள், மாகாண சபைக்குட்பட்ட அதிகார எல்லையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

சில பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளமையைச் சுட்டிக்காட்டிய ஆளுநர்கள், சில பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்தமையோடு, ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அதனைச் சீராக்கச் சந்தர்ப்பம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

‘அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’ என்ற கருத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடங்கள், கட்டி முடிக்கப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமையால் சில கட்டடங்கள் சேதமடைந்து வருகின்றன எனவும், அவற்றை சீர்செய்வதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் ஆளுநர்கள் சுட்டிக்காட்டினர்.

இடைநடுவில் கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், சில திட்டங்களுக்கு இதுவரை நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், மாகாண மட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த சந்தர்ப்பம் வழங்குமாறும் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

# குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகள் தொடர்ந்தும் நடைபெறும் என்று அறிவிப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

பொலிசார் மற்றும், சாந்தபோதி தேரர் ஆகியோருடைய குழப்ப முயற்சிகளைக் கடந்து குருந்தூர்மலையில் சிறப்பாக பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தொடர்ந்தும் இந்தப் பொங்கல் வழிபாடுகள் குருந்தூர்மலையில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் நேற்று இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு உறுதி கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்தப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றாலும் சில குழப்ப முயற்சிகளும் இங்கு முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் பொங்கல் வழிபாடுகளுக்குரிய பொங்கல் பொருள்களை ஏற்றிவந்த உழவு இயந்திரம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டதோடு குருந்தூர்மலைப் பகுதிக்குள் அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் உடனடியாக நாம் பொலிஸார் வழிமறித்த இடத்திற்குச் சென்று எமது தலையீட்டுடன் அந்த பொங்கல் பொருள்களை எடுத்து வந்து இங்கே பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்டோம்.

அவ்வாறு பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது சுற்றியிருந்த பொலிஸாரின் பாதுகாப்பையும் மீறி எமது வழிபாட்டுப் பகுதிக்குள் நுழைந்த கல்கமுவ சாந்தபோதி தேரர் எமது வழிபாடுகளைக் குழப்ப முயன்றார். எனினும் எமது மக்கள் அவரை அங்கிருந்து வெளியேறுமாறு கோசமிட்டனர்.

அதனைத் தொடர்ந்து பொலிஸாருடைய தலையீட்டுடன் அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாகவும், தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு மிகச் சிறப்பாக இந்த பொங்கல் வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த பொங்கல் வழிபாடுகள் இனியும் தொடர்ந்து குருந்தூர்மலையில் இடம்பெறும். அதற்குரிய தினங்களை நாம் தொடர்ந்து அறிவிப்போம். அந்தத் தினங்களில் இங்கு பொங்கல் வழிபாடுகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். – என்றார்.

# குருந்தூர்மலையில் சிவாலயம் நாம் ஒன்றிணைந்து கட்டுவோம்

## பொங்கலின் பின்னர் சிறீதரன் எம்.பி. உறுதி



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் பாரம்பரியமான, வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் நேற்று இடம்பெற்ற பொங்கல் வழிபாட்டில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மிகப்பெரிய அடாவடிகளுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில், குவிக்கப்பட்ட பொலிஸார் மற்றும்

விசேட அதிரடிப்படையினருக்கு மத்தியிலும், குருந்தூர் மலையில் அத்துமீறி விகாரை அமைத்திருக்கின்ற பிக்குவின் அடாவடிகளுக்கு மத்தியிலும், இந்தப் பொங்கல் நிகழ்வு மக்களுடைய கூட்டு முயற்சியாலும், அனைவருடைய ஒத்துழைப்புடனும் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட தடைகள் இருந்தும், அந்தத் தடைகளைத் தாண்டி நீதியின் பக்கம் நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதித்துறையினால் நியாயமான பக்கங்கள் எண்ணத்திலெடுக்கப்பட்டு, அந்த எண்ணத்தின் அடிப்படையில் நேர்மையாகவும், நேர்த்தியாகவும் நடைபெற்ற இந்த பொங்கலுக்காக நாம் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழர்கள் ஆதிகாலம் தொட்டு அவர்கள் வணங்கிவந்த, வாழ்ந்து வந்த அவர்களது வரலாற்று அடையாளமான குருந்தூர்மலையிலே, தமிழர்களுடைய இருப்பை இல்லாமல் செய்து, குருந்தூர்மலை பௌத்த தொல்லியல் இடமாக ஆக்கிரமித்து, விகாரை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, அந்த விகாரை எந்தவித அனுமதியுமின்றி தொல்பொருள் திணைக்களத்தினுடைய முழுமையான ஆதரவுடனும், அரச ஆதரவுடனும் கட்டப்பட்டிருக்கின்றது.

அதேவேளை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடங்கள் அழிக்கப்பட்டு, இந்த இடத்தில்தான் நீங்கள் பொங்கவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. அதிலும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பாக நிலத்திலே கற்கள் வைத்து கற்களுக்குமேல் தகரம்வைத்து தகரத்தின்மேல் கற்கள் வைத்தே பொங்கல் செய்யவேண்டும் என்ற அதிசயமான சட்டங்களை இந்த மண்ணில், இந்த ஆலயத்தில் என்னால் காணமுடிந்தது.

தொல்லியல் என்பது அடையாளமாக வைத்துப் பார்க்க வேண்டிய இடமே தவிர, அந்த இடம் விகாரை கட்டப்படவேண்டிய இடமல்ல.

இங்கே சிங்களமக்களுக்கு ஒரு சட்டம், தமிழர்கள் வாழ்கின்ற பூர்வீக நிலங்களுக்கொரு சட்டமாக ஆக்கிரமிப்பாளர்களது நிலையை நாம் இந்த இடத்தில் காண்கிறோம்.

இது தமிழர்களுடைய இருப்பையும், அவர்களுடைய எதிர்கால வாழ்வையும் மிகப்பெரிய கேள்விக்குட்படுத்தியிருக்கின்றது.

ஆனாலும் நாம் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால், எங்களுக்குள் இருக்கிற வேற்றுமைகளுக்கு அப்பால், ஒற்றுமையாக அனைத்துத் தமிழர்களும் இணைந்து, எம்பெருமான சிவனுக்குரிய அரோகரா என்ற நாமத்துடன் இந்த பொங்கல் விழாவைச் செய்திருக்கின்றோம். இந்தப் பொங்கல் விழா தொடர்ந்து மாதாந்தம் இடம்பெறும்.

அதேவேளை எங்களுடைய மக்களின் இருப்பும் அவர்களுடைய தொன்ம அடையாளங்களும் பேணப்படும் வகையில் எங்களுடைய செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

இந்த இடத்திலே, பாரம்பரியமான வரலாற்று புகழ்மிக்க சிவாலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் அனைவரும் இணைந்து முன்னெடுப்போம் – என்றார்.

# தலைநகர் கொழும்பில் 18 மணி நேர நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளில் இன்று காலை 08 மணி முதல் நாளை அதிகாலை 2 மணி வரை 18 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மின்சார சபையின் பராமரிப்பு நடவடிக்கைகள் காரணமாக அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விநியோகிக்கப்படும் மின்சார விநியோகம் தடைப்படுதல் மற்றும் அத்தியாவசிய உள்ளக விஸ்தரிப்பு பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய கொழும்பு, தெஹிவளை, கல்கிசை, கோட்டே, கடுவலை நகரசபை பகுதிகள், மஹரகம, பொரலஸ்கமுவ, கொலன்னாவ பிரதேச சபை பகுதிகள், கொட்டிகாவத்தை, முல்லேரியா பிரதேச சபை பகுதிகள், இரத்மலானை மற்றும் கட்டுப்பெத்த ஆகிய பகுதிகளில் நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

எனவே, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறும் இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 1939 எனும் இலக்கத்தைத் தொடர்புகொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# வெளிநாட்டுப் பிரஜை உள்ளிட்ட இருவர் கொக்கைன் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு – நாரஹேன்பிட்டியில் கொக்கைன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டு பிரஜையிடமிருந்து 02 கிலோ 294 கிராம் கொக்கைன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸை சேர்ந்த 28 வயதான ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டமையுடன், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்நபர், பிலிப்பைன்ஸ் பிரஜையிடமிருந்து கொக்கைனை பெற்றுக்கொள்ள வருகை தந்துள்ளமையுடன், அவர் பயணித்த காரும் 07 லட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிருலப்பனையை சேர்ந்த 49 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் உள்ள பிரதான போதைப்பொருள் கடத்தல்காரரின் ஆலோசனைக்கு அமைவாக, இந்த நபர் கொக்கைன் போதைப்பொருளைப் பெற்றுக்கொள்ளச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் பிரஜை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 3,000 மருத்துவர்களுக்கு நாட்டில் பற்றாக்குறை!

நாட்டில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது என சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதில், 600 இற்கும் அதிக விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது என வும் அமைச்சுக் கூறியுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறையால் சில வைத்தியசாலைகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு இறுதிக்குள் 2000 வைத்தியர்கள் வைத்திய சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இதனூடாக விசேட வைத்திய நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை பிரச்சினை ஓரளவு நிவர்த்திக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையினால் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வருட காலத்திற்குள் 274 வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தக் காலப் பகுதிக்குள் விசேட தரங்களை சேர்ந்த 842 வைத்திய அதிகாரிகளும் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.



# தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு கச்சதீவை மீட்பதே நிரந்த தீர்வு!

## - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு





இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு கச்சதீவை மீட்பதே நிரந்த தீர்வாக அமையும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரம் – மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மீனவர் மாநாடு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஒவ்வொரு தடவையும் தாம் பிரதமர் மோடியை வலியுறுத்தி வருகிறோம் எனினும் இதுவரை எவ்வித தீர்வுகளும் வழங்கப்படவில்லை எனவும் கச்சதீவை தி.மு.க. அரசே இலங்கைக்கு தாரைவார்த்தது என வரலாறு தெரியாமல் பிரதமர் மோடி கூறியுள்ளார் என முதல்வர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவு எந்தவொரு காலத்திலும் இலங்கைக்கு சொந்தமானது என வரைபடங்களில் கூட கூறப்படவில்லை எனவும் இந்திய வரைபடத்துடன் இணைக்கப்பட்டதாகவே உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு கச்சதீவை தாரை வார்த்தமையின் ஊடாக இந்தியாவை விட தமிழகத்திற்கே அதிகளவான பாதிப்பு என தி.மு.கவினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டது எனவும் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எனவே, கச்சதீவு விவகாரத்தில் அதற்கான ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை தூதரக ரீதியாக பா.ஜ.க. தலைமையிலான இந்திய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமெனவும் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவு மீட்பு விவகாரத்தில் தி.மு.க அரசு உறுதியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் தமிழர் போராட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ அப்போதிலிருந்து தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களும் ஆரம்பிக்கப்பட்டது என ஸ்டாலின் கூறியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பா.ஜ.க. ஆட்சி அமைக்கப்பட்ட பின்னரே தமிழக மீகவர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் அடக்கு முறைகள் அதிகரித்தன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அவர்களின் படகுகளே அடிப்படையாக அமைந்துள்ள நிலையில், அவற்றை கைப்பற்றுவதும் வலைகளை அறுத்தெறிவதும் இலங்கை அரசாங்கத்தின் தொடர்கதையாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே கைது, சிறைவாசம் என்பவற்றைத் தாண்டி, மீனவர்களின் படகுகளை கைப்பற்றும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையை தாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# கச்சதீவை மீட்க வேண்டுமென ஸ்டாலின் கூறுவது கேலிக்கூத்து!

## டி.டி.வி. தினகரன் குற்றச்சாட்டு

இனியும் கச்சதீவை மீட்கப்போகிறோம் என போலி கண்ணீர் வடிப்பதை விட்டுவிட்டு, மீனவர்கள் நலனை பாதுகாக்கவும், மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கச்சதீவை இலங்கை அரசிடம் தாரை வார்க்க காரணமாக இருந்தது தி.மு.கதான் என்று உலகுக்கே தெரிந்த நிலையில் அதனை மீட்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுப்பது நகைப்புக்குரியது.


கச்சதீவு பகுதியை கடந்த 1974 ஆம் ஆண்டு காங்கிரஸ் அரசு இலங்கை அரசிடம் ஒப்படைத்தபோது தமிழகத்தில் ஆட்சியில் இருந்த கருணாநிதி தலைமையிலான அரசு அதனை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, இப்போது திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று கூறுவது கேலிக் கூத்தாக உள்ளது.

தமிழக மீனவர்கள் நலன்களை குழிதோண்டி புதைக்கும் வகையில் மத்திய அரசு, இலங்கையிடம் கச்சதீவை ஒப்படைத்த போது ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க, அப்போதைய கருணாநிதி அரசு வலுவான எதிர்ப்பை தெரிவிக்கவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை.

இனியும் கச்சத்தீவை மீட்கப்போவதாக போலி கண்ணீர் வடிப்பதை விட்டுவிட்டு, மீனவர்கள் நலனை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் பாரிய பொருளாதார நெருக்கடி!

## - 1.5 கோடி மக்கள் பாதிப்பு!



ஆப்கானிஸ்தானை தலிபான் அமைப்பு கைப்பற்றி இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அங்கு பொருளாதார நெருக்கடி காரணமாக கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச அமைப்புகள் தொடர்ந்தும் கவலை தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் 1.55 கோடி மக்கள் கடுமையான உணவு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக நிலவி வரும் வறட்சி மற்றும் 2 ஆண்டுகளாக நிலவும் பொருளாதார நெருக்கடி ஆகியவை மக்களின் தேவைகளை அதிகப்படுத்தியிருக்கிறது என செஞ்சிலுவை சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் 27 லட்சம் மக்கள் நீண்ட கால உணவு பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வகையில் பெரிய பொருளாதார திட்டங்களை அரசு தொடங்கியிருக்கிறது என தலிபான் அரசின் பொருளாதார அமைச்சகம் கூறியுள்ளது.

உணவு பற்றாக்குறையால் தவித்து வரும் ஆப்கானிஸ்தானுக்கு உதவும் விதமாக, ஐ.நா. சர்வதேச உணவு திட்டத்துடன் இணைந்து இந்தியா கோதுமை வழங்குகிறது.

இந்தியா இதுவரை ஆப்கானிஸ்தானில் உள்ள ஐ.நா. சர்வதேச உணவு திட்ட மையங்களுக்கு மொத்தம் 47,500 மெட்ரிக்தொன் கோதுமை வழங்கியுள்ளது. ஆப்கானிஸ்தானில் உள்ள 1.6 கோடி மக்களை பாதுகாப்பதற்கான உணவை வழங்க இந்தியா உதவியதற்கு ஐ.நா. சர்வதேச உணவு திட்ட மையம் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட கனடா காட்டு தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை!



வட கனடா பிராந்தியத்தில் ஏற்பட்ட காட்டு தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

யெலோனைஃப் நகரத்தில் உள்ள 20 ஆயிரம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றும் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக 22 விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் நீண்ட வரிசையில் மக்கள் இருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று பிரிட்டிஷ் கொலம்பிய மாநிலத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# கொலம்பியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!



தென் அமெரிக்க நாடான கொலம்பியா நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியுள்ளது.

தலைநகர் போகோடாவின் தென் கிழக்கே 100 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

உயரமான கட்டடங்களில் வசித்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொலம்பியாவில் உள்ள மெடல்லின் மற்றும் காலி உள்ளிட்ட நகரங்களிலும் இந்த நிலநடுக்கத்தின் தாக்கத்தை உணரப்பட்டுள்ளது.




# போதைப் பொருள் பாவனைக்கு எதிராகத் திரண்டது காத்தான்குடி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி வரலாற்றில் முதல் தடவையாக பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் வீதியில் இறங்கி போதை வஸ்து பாவனைக்கு எதிராகவும் போதைவஸ்து விற்பனையாளர்களுக்கு எதிராகவும் பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தியமையுடன் சத்திய பிரமாணத்திலும் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள சகல அமைப்புக்களுடனும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த பாரிய ஆர்ப்பாட்டம் காத்தான்குடி முகைதீன் பெரிய மெத்தை ஜும்மா பள்ளிவாசல் மற்றும் புதிய காத்தான்குடி அக்சா ஜும்மா பள்ளிவாசல் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமான பாரிய கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் காத்தான்குடி குர்ஆன் சதுக்கத்திற்கு வந்தடைந்தது. அங்கு ஒன்று திரண்ட மக்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் சத்திய பிரமாணம் சொல்லிக் கொடுக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் போதைக்கு எதிராக சத்திய பிரமாணத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள், பள்ளி பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், அரசியல் பிரமுகர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த சத்தியப் பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கொளுத்தும் வெயிலையும் பாராது பல மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டத்திலும் சத்திய பிரமாணத்திலும் பொது மக்கள் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மைய நாள்களில் காத்தான்குடி பிரதேசத்தில் போதை வஸ்து பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை என்பன அதிகரித்திருப்பதையடுத்து அதில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் முகமாகவே இவ்வாறானது நிகழ்வை நடாத்தியதாக காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஆஸ்பத்திரிக்குப் பின்னால் சிசுவை கைவிட்டுச் சென்ற தாயார் கைது!



பிறந்து மூன்று நாகளேயான குழந்தையை பெற்றெடுத்ததாகக் கூறப்படும் பெண் ஒருவர், அதனை மஹியங்கனை போதனா வைத்தியசாலைக்கு பின்னால் கைவிட்டுச் சென்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டார்எனமஹியங்கனைபொலிஸார் தெரிவித்தனர்.

கிராந்துருகோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறந்து மூன்று நாள்களேயான அந்த குழந்தை, வைத்தியசாலையின் விசேட குழந்தைகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.



# ஐம்பது லட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர முயற்சி!

வருடாந்தம் ஐம்பது லட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடியதும், சிறந்த சுற்றுலா வசதிகளை கொண்ட இடமாகவும் இலங்கையை மாற்றுவதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகளை மேம்படுத்தும் வகையில், தற்போது பயன்படுத்தப்படாத பாரம்பரிய தோற்றம் கொண்ட கட்டடங்கள் மற்றும் சொகுசு மனைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க வேண்டும் எனவும், தற்போது வரையில் சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்கு உட்படாத பகுதிகளை கண்டறிய வேண்டும் எனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய முதலீடுகளுக்கு உகந்த சூழலை நாட்டிற்குள் உருவாக்குவதற்கான முதலீட்டு உட்கட்டமைப்பு கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்பட்டு, கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சபையொன்றை ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டு வலயங்கள், சுற்றுலா வலயங்கள், தொழில்நுட்ப வலயங்கள் என்பவற்றை அதன் கீழ் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 09 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், சுற்றுலாச் சபைகளை ஸ்தாபிக்கவும் ஒவ்வொரு மாகாண சபைகளின் கீழ் பிராந்திய குழுக்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

### இங்கு வாழும் சமூகங்களின் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில்

# கிழக்கு மாகாணக் கொடியை சீரமைக்க கோருகிறார் ஹரீஸ்

## ஆளுநருக்கு ஹரீஸ் எம்.பி கடிதம்

**(நூருல் ஹுதா உமர்)**

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் கலாசார விடயங்களை உள்ளடக்கியதாக கிழக்கு மாகாண சபையின் கொடியைச் சீர்செய்ய கோரி முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குக் கடிதமொன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் கிழக்கு மாகாண ஆளுநராக பதவியேற்று மாகாணத்தை மேம்படுத்த முன்னெடுத்து வரும் பல்வேறு பணிகளில் மற்றுமொரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இன மக்களினதும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கிழக்கு மாகாணக் கொடி திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை அவர் முன்வைத்துள்ளார்.

மேலும், வடகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்த ஆளுநர் ஒருதலைப் பட்சமாக மக்களின் அபிப்பிராயங்களோ, அதிகாரிகளின் ஆலோசனைகளோ பெறாமல் இனவாத சிந்தனையில் இப்போதுள்ள கிழக்கு மாகாணக் கொடியை உருவாக்கியுள்ளார் என்றும், அதில் கிழக்கில் வாழும் சமூங்கங்களின் அடையாளங்கள் இல்லாதிருப்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் வடமாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள வடமாகாணக் கொடி அந்த மாகாணத்தில் வசிக்கும் சகல இனங்களினதும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். எனவே சிறுபான்மை சமூகத்தை சேர்ந்த ஆளுநர் என்ற அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல சமூகங்களையும் – குறிப்பாக மாகாணத்தில் 40 சதவீதமளவில் வாழும் முஸ்லிங்களின் – கலாச்சாரத்தை பிரபலிக்கும் எவ்வித அடையாளமும் இந்த கொடியில் உள்ளடக்கப்படவில்லை என்பது மட்டுமின்றி, ஆகக்குறைந்தது முஸ்லிம்களை அடையாளப்படுத்தும் வகையில் நிறம் கூட பிரதிபலிக்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த விடயம் நீண்டகாலமாக முஸ்லிம் சமூகத்தை வேதனைக்கு உட்படுத்தியுள்ளது என்பதையும் மனதில் கொண்டு, இந்தக் கொடி விடயத்தில் கவனம் செலுத்தி, அதனைச் சீர்செய்ய உடனடியாக முன்வரவேண்டும் என்று அந்த கடிதத்தில் ஆளுநரை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மாகாணங்களுக்கான நிபுணர்குழுவை ஜனாதிபதி நியமிப்பது ஏமாற்று வேலை!

## நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

13 ஆவது திருத்த சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு நிபுணர்கள் குழுவை ஜனாதிபதி நியமிப்பது என்பது இந்த நாட்டு மக்களையும் இந்தியா உட்பட சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகமாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உருவாகிய 13 ஆவது திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டு 36 வருடங்கள் கடந்திருந்தாலும் இலங்கை அரசமைப்பில் இருக்கும் ஓர் அங்கமான இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசாங்கங்களும், கட்சிகளும் இலங்கை அரசமைப்பை மீறும் ஒரு சட்டவிரோதமான நடவடிக்கையை செய்து கொண்டிருக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நாடாளுமன்ற அனுமதியைப் பெறவேண்டும் எனக் கூறுகின்றார்.

உண்மையிலே 1987 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்துடன் 18 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருக்காத நிலையில் ஒட்டுமொத்த சிங்கள மக்களின் பிரதிநிதிகளினால் 6 இல் 5 பெரும்பான்மையைக் கொண்டு பெரும்பான்மையாக நிறைவேற்றப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் ஒருதடவை நாடாளுமன்றம் கொண்டு போக வேண்டிய தேவை இல்லை.

இந்த நிலையில் இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து சிங்கள மக்கள் மத்தியில் செல்லாக் காசுகளாக இருந்த அரசியல்வாதிகளைத் தட்டியெழுப்பி இனங்களுக்கிடையே மீண்டும் ஓர் இனக்கலவரத்தை உருவாக்கும் இந்த நிலையை ஜனாதிபதி ஏற்படுத்தியிருக்கின்றார்.




**குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களம் இந்து கோயில் பூஜை வழிபாடு செய்ய விடாது அங்கு விகாரை அமைத்துள்ளனர். பொங்கல் செய்ய இந்துக்கள் செல்லு-கின்றனர். அங்கு அதைத் தடுக்க இனவாத அரசியல் வாதியான உதய கம்மன்பில்ல உட்பட பௌத்த தேரர்கள் செல்லுகின்றனர். இவற்றையெல்லாம் ஜனாதிபதி தூண்டி விட்டுப் புதினம் பார்கின்றார்.**

13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபைகளின் தேர்தலை நீண்ட காலமாக நடாத்தாமல் இழுத்தடிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. ஒரு ஜனநாயக நாட்டிலே மக்கள் தங்களை ஆளக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். அதுதான் ஜனநாயகம். ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடாத்தாமல் மாகாணசபைகளுக்கு நிபுணர்கள் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார். அதற்கு ஒத்துழைத்து, முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் உட்பட சில கட்சியினர் ஜனாதிபதிக்கு ஒத்தாசை புரிகின்றனர்.

மாகாணசபை நிபுணர்குழு என்பது மாகாணசபைத் தேர்தலைப் பின் போடுவதற்கான தந்திரமே ஒழிய, நிபுணர்குழு அமைப்பதால் எதுவுமே சாதித்துவிட முடியாது. மாகாணங்களுக்கும் மத்திக்கும் இடையே இருக்கும் அதிகாரங்களை எப்படிப் பகிர்வது என்பது பற்றி கண்டறிவதற்காக இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

எப்படி பகிரவேண்டும் என்பது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக பொலிஸ் அதிகாரம் தொடர்பாக தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மாகாணப் பொலிஸ் ஆணைக்குழுவிலும் மத்திய பொலிஸ் ஆணைக்குழுவிலும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட 3 பேர் இருப்பார்கள் என்று தெளிவாக உள்ளது. ஆனால் சிலருக்கு வரலாறு தெரியாது.

1988 ஆம் ஆண்டு இறுதியிலே வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு டி.ஐ.ஜி. ஆனந்தராஜாவை அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸா நியமத்து அவரின் கீழ் 3 ஆயிரம் பொலிஸாரை முதலில் நியமிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனவே பொலிஸ் அதிகாரம் 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்டிருப்பதுதான் உண்மை.

அந்த வகையில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு நிபுணர்கள் குழுவை ஜனாதிபதி நியமிப்பது என்பது இந்த நாட்டு மக்களையும் இந்தியா உட்பட சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே பார்க்கின்றேன்.

இன்று குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களம் இந்து கோயில் பூஜை வழிபாடு செய்ய விடாது அங்கு விகாரை அமைத்துள்ளனர். பொங்கல் செய்ய இந்துக்கள் செல்லுகின்றனர். அங்கு அதைத் தடுக்க இனவாத அரசியல்வாதியான உதய கம்மன்பில்ல உட்பட பௌத்த தேரர்கள் செல்லுகின்றனர். இவற்றையெல்லாம் ஜனாதிபதி தூண்டிவிட்டுப் புதினம் பார்கின்றார்.

ஒரு சர்வ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து கொண்டு பொருளாதார பிரச்சினைக்கு மாத்திரமல்ல,புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைக் காண அவர் வழிகோல வேண்டும். -என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2023

## மேஷம்

இன்று உற்சாகமான நாளாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும். முடிவுகளை சிறந்த முறையில் எடுப்பீர்கள்.

உங்கள் ஆற்றலுக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கலாம்.

உங்கள் மகிழ்ச்சியை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இரவரும் ஒன்றாக இருந்து நேரத்தை மகிழ்ச்சியாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். அதிகரிக்கும் பண வரவு திருப்தி கரமானதாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## ரிஷபம்

இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்துங்கள். யதார்த்தமான அணுகு முறை தேவை. முக்கிய முடிவுகள் எடுப்பதை விலக்கி வைக்க வேண்டும். இன்றைய நாள் பாதிப்பு வராமல் இருக்க பொறுமை அவசியம்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. உங்களின் நல்ல தொடர்பும் ஒத்துணர்வும் சகபணியாளர்களிடம் நல்லுறவை ஏற்படுத்தும். அனைத்திலும் நல்லதையே காணுங்கள்.

எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்களின் நட்பு அணுகு முறையால் உங்கள் துணை கவரப்படுவார். இதனால் இருவருக்கும் இடையே அன்பு வளரும்.

சில கூடுதல் செலவுகள் காணப்படும். சிறப்பாக பணத்தை நிர்வகிப்பதும் விவேகத்துடன் செலவு செய்வதும் நல்லது.

## மிதுனம்

சமயோஜிதமாக யோசித்து இன்றைய பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நம்பிக்கையுடன் இந்த நாளை எதிர்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

பணிகளை சிறப்பாக திட்டமிடுவதும் நேரத்தோடு பணி புரிவதும் உங்கள் நிலையை உயர்த்தும். நேரத்தை நிர்வகித்தால் அதிக சக்தியை இழக்க வேண்டாம்.

உங்கள் துணையுடன் இணக்கமான மகிழ்ச்சியான உறவைப் பராமரியுங்கள். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இருவருக்கும் பொதுவான இலட்சியத்தை அமைத்து எப்பொழுதும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும்.

பணத்தை கையாள கற்றுக் கொள்ளுங்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை பயன்படுத்துங்கள்.

## கடகம்

இன்று நாள் சிறப்பாக இருக்கும். உங்களிடம் உற்சாகம் அதிகமாக காணப்படும். செய்யும் செயலில் வெற்றி பெறுவீர்கள். இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.

உங்கள் பணியில் நற்பலன்கள் காண்பீர்கள். உங்களின் சுய உந்துதல் காரணமாக வளர்ச்சி காணப்படும். இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். இன்றைய நாள் பிரகாசமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு வெகுமதி கிடைக்கும்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலையில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. ஆன்மீக விஷயங்களுக்கு விரும்பியே பணத்தை செலவு செய்வீர்கள்.

## சிம்மம்

இன்று பொறுமையாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிறருடன் பேசும் போது ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள் எப்படும் என்பதால் தேவையற்ற இடங்களில் பேச வேண்டாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

சிறப்பான முறையில் பணியாற்றுங்கள். உங்கள் பணியாற்றும் முறை காரணமாக தவறுகள் குறையும். அனைவரிடமிருந்தும் பாராட்டும் கிடைக்கும். பணிகளை ஆற்றும் போது கவனம் இழக்க வேண்டாம்.

இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும் என்றாலும் நேர்மறை எண்ணத்தோடு செயல்பட்டால் இது கவலை அளிக்கும் விஷயமாக இறக்காது. அனைவரிடமும் நட்புடன் பழக வேண்டும்.

## கன்னி

உங்கள் செயல்களில் எதிர்பாராத தடைகளை எதிர்கொள்வீர்கள். மனம் தளராமல் தைரியமாக நம்பிக்கையோடு பிரச்சினைகளை எதிர்கொள்ளுங்கள். இது பிரச்சினையின் தீவிரத்தை குறைக்கும். நிகழ்வுகளை எதிர்கொள்ளும் நம்பிக்கை பிறக்கும். கட்டுப்பாட்டுடன் இருந்தால் இன்று சிறந்த பலன் கிடைக்கும்.

கவனமாக இருக்க வேண்டும். எந்த விஷயத்திலும் அலட்டிக்கொள்ளாமல் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை 100 சதவிகிதம் முயற்சியுடன் விரும்பி செய்வதன் மூலம் நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறிது நேரம் கழிப்பது சிறந்தது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நீங்கள் அந்தரங்கமாக ஆலோசிக்க வாய்ப்பு கிடைக்கும்.

## துலாம்

இன்று நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். தொண்டு நடவடிக்கைகள் இன்று ஆறுதல் தரும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியில் முன்னேற்றம் காண கவனம் தேவை. உங்கள் கவனத்தைச் சிதற வைக்கும் விஷயங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொண்டு சிறப்பான பலன்களை காணலாம்.

உங்கள் துணையுடனான உறவில் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் கருத்தை ஒருவர் மதித்தால் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட்டு கருத்து வேறுபாடு மறையும்.

சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் பணம் கரையாமல் பார்த்துக் கொள்ளலாம். இருக்கும் பணத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

இன்று அதிர்ஷ்டமான நாள். தடைகளை எளிதாக சமாளிப்பீர்கள். சிறிது அனுசரித்து நடந்தால் எல்லாம் சிறப்பாக அமையும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை உடனுக்குடன் விரைவாக நல்ல தரத்துடன் வழங்குவீர்கள். உங்களின் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இருவருக்கும் இன்று சிறப்பான நாள். ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நட்புடன் இருப்பீர்கள். இருவரிடையே நல்ல பிணைப்பு காணப்படும்.

உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2023




இன்று நாள் சீராக இருக்கும். இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும். இதனை திறமையாக பயன்படுத்தி நீங்கள் வெற்றி காண் பீர்கள்.

பணியிடத்தில் இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் அனைத்துப் பணிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் ஆதரவுடன் இருப்பார்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர் கள். இருவரும் நல்ல மன நிலையில் இருப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பண வரவு அதிகரிக்கும். கடந்த சில ஆண்டுகளில் சேமித்ததன் காரணமாக உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும்.




நீங்கள் நேர்மறை எண்ணம் கொண்டு தைரியமாக சவால்களை எதிர் கொள்ள வேண்டும். உங்கள் சுய முயற்சி மட்டுமே உங்களின் இன்றைய நாளை பிரகாசமாக்கும். உங்கள் மன தில் எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்

சக பணியாளர்களிடம் தொழில் சார்ந்த அணுமுறையை மேற்கொள்ளுங்கள். அமைதியாக இருந்து பிரச்சனை களை சமாளிக்க கற்றுக் கொள்ளுங்கள். நேர்மையுடன் உங்கள் பணிகளை ஆற்றுங்கள். உங்கள் சக பணி யாளர்களுக்கு உதவுங்கள்.

உங்கள் துணையுடன் பொறுமை கொள்ள வேண்டும். கருத்து வேறுபாடு காரணமாக சிறிய விஷயங்களை பெரிதாக்காதீர்கள். மகிழ்ச்சியுடன் இருக்க பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

பண வரவு குறைந்து காணப்படும்.




உங்கள் மனதில் இருந்து எதிர் மறை எண்ணங்களை நீக்க முயலுங் கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் யோகா மேற்கொள்வது இன்று பயனுள்ளதாக இருக்கும். எதிர்காலத்தைப் பற்றி மிகுந்த கவலை வேண்டாம். எதிர்காலத்திற்காக இன்றே திட்டமிட்டால் நாளை செழிப்பாக இருக்கலாம்.

இன்றைய நாளில் குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றுங்கள். கடைசி நிமிட அவசரத்தை தவிர்க்க வேண்டும். உங்கள் பணி நிமித்தமாக இன்று பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

சகஜமாகவும் உங்கள் கருத்துக்களை மென்மை யாகவும் உங்கள் துணையிடம் எடுத்துக் கூறுங்கள். உறவில் நல்லிணக்கம் பேண உங்கள் துணையிடம் அமைதியாக விஷயங்களை கையாள வேண்டும்.




இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப் படும் ஆற்றல் உங்களை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லும். உங்கள் எண்ணங்களில் காணப்படும் தெளிவு காரணமாக அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதனை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வேலைகளை எளிதாகச் செய்வீர்கள்.

இருவருக்கும் இடையேயான உறவு சிறப்பாக இருக்கும். இதனால் உறவு வலுப்படும்.

உங்கள் அவசர தேவைகளை சமாளிக்க சிறைய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்களுக்கு கிடைக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

